அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.32/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்-கொழும்பு.7
1988 செப்தெம்பர் 16ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

அரசாங்க சாகித்திய விழா 1988 செப்தெம்பர்
23ஆம், 24ஆம், 25ஆம் திகதிய சாகித்திய விழாக்கள்
அமைச்சு, திணைக்கள், கூட்டுத்தாபன மட்டத்தில்.

---

அரசாங்க சாகித்திய விழாக்களை நியத்தலாவையில் 1988 செப்தெம்பர் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் விமரிசையாகக் கொண்டாடுவதற்கு கலாசார அலுவல்கள் அமைச்சு ஒழுங்குகளைச் செய்துள்ளது. மாகாண சபைகள், அரசாங்க திணைக்களங்கள், நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், பாடசாலைகள், பிரிவேனைக்கள், கோயில்கள், கிராமோதய சபைகள், பிரதேச மண்டலங்கள் ஆகியனவும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்றனவும் அவற்றில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகளையும் அமைச்சு செய்துள்ளது.

02. மனிதப் பண்புகளையும் உயர்ந்த இலக்கிய ரசனைகளையும் விருத்தி மேம்படுத்தும் சிறந்த இலக்கியங்களை வாசிக்கும் பழக்கம் கொண்ட அரசாங்க நிறுவனங்களில் தொழில்புரியும் உத்தியோகத்தர்கள் வழக்க முறையான இயந்திரமய அலுவலக வேலையிலிருந்து விடுபடுவதற்கு சாகித்திய மாதத்தைப் பயன்படுத்துவது மிகப் பொருத்தமானதெனவும் அது கருதுகிறது. பொது மக்கள் நலன் பொருட்டான வேலைகளில் அவர்கள் தம்மைச் சிறப்புற ஈடுபடுத்துவதற்குரிய பொருத்தமான மனிதவியல் சிறப்பியல்புகளையும் அவர்கள் பால் நிலை நாட்ட அது உதவும்.

03. தாங்களும் தங்களது நிறுவனங்களிலுள்ள பல்வேறு சங்கங்களும் இலக்கியத்தில் சிறந்த ரசனையை விருத்தி செய்து பண்பியல், அறிவியல் எழும்பாட்டிற்குத் தம்மை அர்ப்பணித்து இலக்கியத்தில் நாட்டம் கொண்டோரும் இந்த மாதத்தில் இலக்கிய ஆய்வரங்குகள், விரிவுரைகள், போட்டிகள், கலாசார உற்சவங்கள் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நாடளாவிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு முழு நிறைவான ஒத்துழைப்பை அளிக்க வேண்டியது முக்கியமாகும்.

04. இந்த நோக்கத்திற்கு கலாசார அலுவல் அமைச்சு தங்கள் நிறுவனத்தில் ஏலவேயுள்ள இலக்கிய சங்கங்களுக்கு அல்லது அவற்றுடன் இணைந்துள்ள சங்கங்களுக்கு புத்தூக்கம் அளிப்பதற்கு உத்தேசித்துள்ளது. யாப்பின் வரைவொன்றை சிங்களமொழியில் இத்துடன் அனுப்பி வைக்கிறேன். அதை இந்த நோக்கத்திற்கு பொருத்தமுற அமைத்துக் கொள்ளலாம். இந்த விடயத்தில் தாங்கள் மேலும் உதவி பெறவிரும்பினால் கலாசார அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

05. இச்சுற்றறிக்கை கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளின் பேரில் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.